# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் – 10

# வேதாகமம் கூறும் மனிதரின் மூன்று பாதைகள்








Bible Research and Study Centre

## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமம் கூறும் மனிதரின் மூன்று பாதைகள்




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள மூன்று வழிகள் குறித்து ஆராய்வோம்.

> **மத்தேயு 7:13,14ல் - 'இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

அன்பானவர்களே இங்கு நம் கர்த்தர் இருவழிகளைப்பற்றி பேசியுள்ளார்.

**1. விசாலமான வழி 2. நெருக்கமான வழி.**




விசாலமான வழி என்பது விரிவான வாசலுடன் இருக்கின்ற விசாலமான வழி. இடுக்கமான வழி என்பது இடுக்கமான வாசலுடன் இருக்கின்ற நெருக்கமான வழி. இவ்விரண்டு வழிகளும் எதைக் குறிக்கின்றன? பாரம்பரியமாக இந்த இரண்டு வழிகளும் ஒன்று பரலோகத்திற்கும், ஒன்று நரகத்திற்கும் அழைத்துச் செல்கிறது என்று நம்பப்படுகிறது. இது சரியா? இந்த வார்த்தைகள் இயேசு பேசின வார்த்தைகள் என்பதை நாம் முதலில் நினைவில் கொள்ளவேண்டும். இப்பொழுது இயேசுவின் போதனைகள் போதிக்கப்பட்ட விதத்தைக் குறித்து நாம் ஆராயலாம். அதைக் குறித்து **மத்தேயு 13:34** இல்

> **'இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி அவர்களோடே பேசவில்லை"**

இங்கு சொல்லப்பட்டுள்ள 'வழிகளும்" உவமை மொழியிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளின் பொருள் தான் என்ன? உதாரணமாக, ஒரு இளைஞனோ அல்லது இளம்பெண்ணோ ஏதேனும் தவறான காரியங்களில் ஈடுபட்டால் அவர்கள் பெற்றோர் அவர்களை அழைத்து கேள்விகளைக் கேட்கும்பொழுது,

'உன் வாழ்க்கை எந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று சற்று சிந்தித்துப் பார்" என்று கேட்கலாம். இது அவர்கள் தெரிந்தெடுத்த வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. ஆம். இயேசுவின் நாட்களில், வாழ்வதற்கு இரண்டு விதமான 'முறைகள்" இருந்ததைக் குறிப்பிடுகிறார். அவை ஒரு விசாலமான வழி... ஒரு நெருக்கமான வழி.

மேலும் இந்த வழிகளின் முடிவு பரலோகம் என்றோ நரகம் என்றோ எங்கும் சொல்லப்படவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

மாறாக ஒரு வழி கேட்டுக்கும், மற்றொன்று ஜீவனுக்கும் அழைத்துச்செல்கிறது.

இடுக்கமான வாசலுடன் இருக்கின்ற மூன்றாவது வழி பற்றி ஏன் கூறவில்லை? ஏனெனில் ஏற்ற சமயம், அதாவது கிறிஸ்துவின் இராஜ்யத்தில் திறக்கப்படுகிற வழியாதலால், தம் முதல் வருகையில் அதுபற்றி பேசவில்லை. மூன்றாவது வழி எங்கே? எனும்போது, 3. மூன்றாவது வழி - அது

**ஏசாயா 35:8இல், 'அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும். அது பரிசுத்தவழி என்னப்படும். தீட்டுள்ளவன் இதிலே நடந்துவருவதில்லை. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை".**

வழிகள் எனும்போது அது அடையாள மொழியில் மனிதரின் வாழ்க்கை முறையாகும்இதற்கான பதிலைக் காண, இம்மூன்று வழிகளைப்பற்றி விரிவாக ஆராய்வது அவசியம்.




## 1. விசாலமான வழி

ஆம். இந்த விசாலமான வழியைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் :

**மத் 7:13 - 'இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்"**

முதலில் விசாலமான வழி என்பதன் பொருள் என்ன? மேலும் கேட்டுக்கு என்பது எதைக் குறிக்கிறது என்பதை முதலில் உறுதிசெய்யவேண்டும். மேலும் அநேகர் அந்த வழியாக பிரவேசிக்கிறார்கள் என்று வாசித்தோம். இந்த வழி, உலகத்தின் பெரும்பான்மையான ஜனங்கள் நடக்கக்கூடிய வழியாகவும் இருப்பதாக நாம் உணர்கிறோம். இந்த வழி மனிதனின் அழிவு அல்லது மரணத்தைக் குறிக்கிறது.

உலகில் நாம் பிறக்கும்போதே கேட்டின் வழியே திறந்திருக்கிறது. அதிலேயே செல்கிறோம். குழந்தைகள் முதற்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நாம் உடலளவிலும், மனதளவிலும் கெட்டு பின் கடைசிவரை மரணத்தை அடைகிறோமே..




விசாலமான வழியே நம்மை மரணத்திற்கு கொண்டுசெல்கிற வழி. பாவம் தருகிற மகிழ்ச்சியில் செல்லும் வழி. ஆனால் வேதத்தில்

**'பாவத்தின் சம்பளம் மரணம்"(ரோமர் 6:23)**

என்று நாம் அறிவோம். நாம் வாழும் உலகத்தில் நம்மைச் சுற்றி அநேக அழிவுகள்

நடந்துகொண்டிருக்கிறது.

⇨ *வங்கிகள் திவால் ஆவதின் மூலமாகவும்,*

⇨ *வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டத்தின் மூலமாகவும்*

⇨ *அழிவு, இயற்கை சீற்றங்களாலும் அழிவு ஏற்படுகிறது ,*

⇨ சண்டை, பொறாமையினாலும் நட்பு அழிக்கப்படுகிறது.

இதுபோன்ற எல்லா அழிவுகளிலிருந்தும் மீட்பு அடையலாம். ஆனால், மீளவே முடியாத ஒரு வகையான அழிவு உண்டு. இதுவே இறுதியானது. ... அது மரணமே. ஆம்.மரணம் ஒரு கொடூரமான முடிவு ஆகும்.



மனுக்குலத்தின் முதலாவது இறுதிச் சடங்கை கற்பனை செய்துபாருங்கள். காயீன், ஆபேலை மிகவும் கொடூரமாகக் காயப்படுத்தி, சுற்றிலும் சிந்தியிருந்த இரத்தத்தைப் பார்த்து , ஏதோ கொடூரமானதைச் செய்துவிட்டோமென்று உணர்ந்து, அவருடைய பெற்றோரிடமிருந்தும் அவருடைய சகோதரிகளிடம் இருந்தும் ஓடி ஒளிந்திருக்கவேண்டும். ஆதாமும் ஏவாளும் கவலையோடு , பிள்ளைகள் வீடு திரும்பவில்லையே என்று எதிர்பார்த்திருக்கவேண்டும். தேடிச்செல்லும்போது, ஆபேல் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறதைக் கண்டு, உறங்கிக்கொண்டிருப்பதாக நினைத்து, அவர்கள் அவனை எழுப்பி இருக்கவேண்டும். அவன் எந்த விதமான உணர்ச்சியும் இல்லாமல் படுத்திருக்கும்போது, ஆதாமை நோக்கி ஏவாள் ஒரு வேளை இப்படி சொல்லியிருக்கக்கூடும் :

**'நான் இவ்வளவு ஆழ்ந்த உறக்கத்தில் ஆபேலைப் பார்த்ததில்லையே"** என்று. நேரம் செல்லச்செல்ல ஆபேல் உறங்கிக்கொண்டிருப்பதும், அவன் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டதையும் கவனித்த ஆதாமுக்கு, 'நீங்கள் சாகவே சாவீர்கள்" என்று தேவன் சொல்லிய வார்த்தைகள் நிச்சயமாக நினைவிற்கு வந்திருக்கவேண்டும். தன் மகன் ஆபேல் மரித்துவிட்டான் என்று அறிந்தபின்பு அவருடைய மனோநிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

யார் இந்த பாவ வழியைத் தொடங்கிவைத்தவர் என்றால், ஏதேனில் புசிக்கவேண்டாம் என்ற கனியை புசித்தவுடன் ஆதி தகப்பனாகிய ஆதாம் இவ்வழியை திறந்துவைத்து அவரே இவ்வழியில் நடந்து முடித்தார். அதற்கு அவர் 930 வருடங்கள் எடுத்துக்கொண்டார். அதன்பின் அவரது சந்ததி இன்றுவரை அவ்வழியில் செல்கின்றனர். உதாரணமாக, ஆரம்பத்தில் உள்ள சிறிய வழியானது, பின் மக்கள் நடந்து நடந்து அவ்வழி விசாலமானதுபோல் அப்பாவ வழியானது விசாலமானதுடன் வலுக்கும் தன்மையுடையதாகி, அதில் நடப்பவர்கள் வெகு விரைவில் கேட்டுக்கு (மரணத்திற்கு) சென்றுவிடுகின்றனர். அதாவது, ஆரம்பத்தில் பாவஞ்செய்யும்போது மனதிற்கு கஷ்டம் ஏற்படும். ஆனால் பாவத்தில் பழகப்பழக பின்பு அது சாதாரணமாகிவிடுகிறது.

இந்தக் காரியத்தை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள நாம் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

இன்று உலகில் பொய் பேசுவது எவ்வளவு சாதாரணமாகி உள்ளது. தேவையில்லாத விஷயங்களுக்கெல்லாம் பொய்பேசுவது வாடிக்கையாகிவிட்டது. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சராசரி 250 பொய் பேசுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, கோபம், வஞ்சகம், பொறாமை, போட்டி என அடுக்கிக்கொண்டே போகலாம். இன்று உலகில் இவையனைத்தையும் மக்கள் எவ்வித கூச்சமுமின்றி சந்தோஷமாக செய்து பின் மரணமடைவதை நாம் கண்கூடாகக்

காண்கிறோம். அது மாத்திரமல்ல, தாங்கள் செய்வது அனைத்தையும் செம்மையானது என நினைக்கின்றனர்.

**நீதிமொழிகள் 14:12ல் -‘ மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள்”**

930 வருட காலமாய் ஆதாம் நடந்து முடிந்த அந்த வழியில். இப்போது ஜனங்களின் ஆயுள் மிகமிக குறுகியதாகிவிட்டது. 930 வருடம் ஆதாம் ஜீவித்த வருடங்கள் போய், தற்போது சராசரி 30 வருடமே மனிதனுடைய வாழ்நாளாகிவிட்டது. அதிலும் சிலர் மரணத்தை அடைய அநேக குறுக்கு வழிகளை கண்டுபிடித்துவிட்டனர்(உம்-போதை மருந்துகள், ஆல்கஹால், தற்கொலைகள் போன்றவைகள்) இவ்விதமாக உலகத்தின் ஜனங்கள் எவ்வித நம்பிக்கையுமின்றி இவ்விசாலமான பாவ வழியில் மரணத்திற்கு செல்வதுடன், ஒருவரையொருவர் முந்திக்கொண்டு செல்வதையும் கவனிக்கலாம். ஆக, இது ஒரு பாவ, மரண வழி. இதுவே கேட்டுக்குப்போகிற விசாலமான வழி.



இவ்விதமாக விசாலமான பாதையில் எல்லா ஜனங்களும் செல்லும் வேளையில், தேவன் உலகில் இஸ்ரயேலரை மாத்திரம் தெரிந்துகொண்டு அவர்களிடம் நியாயப்பிரமாணம் அல்லது கற்பனைகள் தந்து, அதன்மூலம் ஒரு வழியை அதாவது கற்பனைகள் கைக்கொள்வதன்மூலம் பாவ மன்னிப்பு மற்றும் தேவனுடைய சொந்த ஜனமாக கருதப்படும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**யாத்திராகமம் 19:5,6 ல், ‘இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்”**



**ஆமோஸ் 3:2ல் - ‘ பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களின் நிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்”.**

**ரோமர் 10:5ல் -’மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக் குறித்து : இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான்”**

ஆனால், **கலாத்தியர் 2:16இல்,’நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே”**

ஆக இவ்வழியானது எந்தவொரு முடிவுக்கும் கொண்டுசெல்லாத ஒரு வழியாகிவிட்டது.

## 2. நெருக்கமான வழி

**மத்தேயு 7:14ல் -’ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்”**



ஆக, கிறிஸ்து தம்முடைய முதலாம் வருகையில் வரும்வரை விசாலமான வழியிலேயே அனைவரும் செல்கின்றனர். கிறிஸ்து வந்து இந்த நெருக்கமான வழியைத் திறந்து, அவரே அதில் முதலாவது நடந்துமுடித்தார். இது ஒரு சிலுவையின் வழி அல்லது கஷ்டமான வழி . இவ்வாறு ஒரு வழி இருக்கிறதை கண்டுபிடிக்கிறவர்களே சிலர். அப்படியாக அதில் நடக்கிறவர்கள் இன்னும் வெகுசிலராக இருப்பர். இதில் பிரவேசிக்கும்படி இயேசு நமக்கு பரிந்துரைக்கிறார்.

**எபிரேயர் 10:19ல் -'சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்.."**

இங்கு ஜீவனுக்கு என்பது எந்த ஜீவனைக் குறிக்கிறது? தேவனுடைய சிருஷ்டிப்பில் அநேகவிதமான ஜீவன்கள் உள்ளது. குறிப்பாக விசேஷமாக பரிபூரணமான சுபாவம் மனிதனின் நீதிமான் சுபாவத்தைக் குறிக்கிறது. ஆதாம்-இயேசு இந்நிலையில் சிருஷ்டிக்கப்பட்டனர். பரிபூரண ஜீவன் என்றால் என்ன?

**சங்கீதம் 8:5-8 இல், 'நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்".**

பூமியின்மேல் இராஜாவாக உள்ள நிலை. பரிபூரண மாம்சத்தில் வியாதியோ சோர்வோ முதுமையோ ஏற்படுவதில்லை. ஒருவேளை ஆதாம் இந்நாள்வரை பாவஞ்செய்யாமல் இருந்தால் உயிரோடே அதே நிலையில்தான் இருந்திருப்பார். மேலும் மிருகங்களைக் கூப்பிட்ட மாத்திரத்தில் அவரிடத்தில் வந்திருக்கும். நமது கர்த்தர்கூட சீஷர்கள் இரவு முழுவதும் மீன்கள் கிடைக்காமல் இருந்தபோது, வலப்பக்கத்தில் வலையைப் போடச்சொன்னபோது வலை கிழியத்தக்கதாக மீன்கள் கிடைத்ததே, எவ்வாறு? பரிபூரண மனிதனாக, பூமியின் மேல் இராஜாவாக அவர் அவைகளை அழைத்தபோது, வந்து வலையில் மாட்டிக்கொண்டது என்று பார்க்கிறோம். ஆனால் இப்போது நாமிருக்கும் நிலை மரணநிலை. ஆதாமின் சந்ததி அனைத்தும் ஜீவன் உள்ளவர்களாக இருந்தும் மரித்த நிலையிலேயே உள்ளனர். விழுந்துபோன பெலவீன பாவசரீரத்தை உடையவர்களாய், வியாதி மரணமுள்ளவர்களாய் இருக்கின்றனர்.` இதுவே கடைசி நிலை ஜீவன் **(எரேமியா 51:17, சங்கீதம் 89:47)**

**சங்கீதம் 8:5இல் , 'நீர் அவனை தேவதூதரிலும் சற்றும் சிறியவனாக்கினீர்"**

எனும்போது, பரிபூரண மாம்ச நிலையிலும் சற்று உன்னதமான, அது தூதர்களின் ஜீவன் நிலை. தூதர்கள் முதன்முதலில் நாம் பார்த்தவண்ணம், அறிவிலும் பலத்திலும் மனிதனைவிட உன்னதநிலையை உடையவர்கள்.



**சங்கீதம் 104:4ல் 'தம்முடைய தூதர்களை காற்றுக்களாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்"**

காற்றுகளாக எனும்போது, கண்ணுக்குத் தெரியாத ஆவியின் சரீரமாயும், கண்ணிமைக்கும் நேரத்தில் பயணம் செல்வதற்காகவும், அக்கினி ஜுவாலை எனும்போது அண்டசராசரம் பரலோகம் உட்பட மிகுந்த ஒளியுள்ளதாயிருக்கிறதினால், வெப்பத்தைத் தாங்கும் சக்திவேண்டி இவர்களை அக்கினி ஜுவாலைகளாகப் படைத்திருக்கிறார். (உம்)

சூரியனுக்குள்ளும் இவர்கள் செல்லலாம். ஆக, விழுந்துபோன பாவமனித ஜீவனும், ஆவியின் தூதரது ஜீவனும் உணவுக்காகவும், மற்ற எல்லா வழிநடத்துதல்களுக்காகவும், குறிப்பாக தேவனை நம்பியிருக்கவேண்டியுள்ளதை,

> **சங்கீதம் 145:15இல் 'எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது, ஏற்றவேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்"**

இப்போது உன்னதமான ஜீவன் நிலையை குறித்து பார்க்கலாம் இந்த நிலையே, தெய்வீக சுபாவத்தைக் குறிக்கிறது. இந்த சுபாவம் முதலில் பிதாவாகிய தேவனுக்கே உரித்தான சுபாவம்

> **1தீமோத்தேயு 6:16 ல்,'ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாய் இருக்கிறார்"**

பிதாவாகிய தேவன் தம்மில்தாமே ஜீவனுள்ளவர். யாரையும் எதற்காகவும் நம்பி இருக்கிறவரல்ல. அவரே எல்லா ஜீவன்களுக்கும் ஊற்றானவர்.**சங்கீதம் 36:9** இல்,மேலும் அழியமுடியாத நிலையில் உள்ளவர். ஆனால், நம் கர்த்தராகிய இயேசு தம்மைப்பற்றிக்கூறும்போது,

> **'மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன்"-வெளி 1:18** என்கிறார்.
>
> **யோவான் 5:26இல்,-'பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறதுபோல குமாரனும் தம்மில்தாமே ஜீவனுள்ளவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்".**

ஆக, பிதாவின் சுபாவமே இயேசுவுக்கு தேவன் தந்திருக்கிறார். இன்றைக்கு சுவிசேஷயுகத்தில் இருக்கக்கூடிய இயேசுவின் சீஷர்களுக்கும் திவ்விய சுபாவமாகிய அழியாமை வாக்களிக்கப்பட்டிருக்கிறது ( **2பேது 1:4,ரோமர் 2:7, 1கொரிந்15:53** ) (உதாரணத்திற்கு- சூரியன் தன்னில்தானே ஒளிகொடுத்து பின் அவ்வொளி மற்ற எல்லா பொருள்களின்மேலும் விழுந்து, அவை பிரதிபலிப்பதைப்போல).

ஆக, இங்கு ஜீவனுக்குப்போகிற வழி எனும்போது, அழியாமை ஜீவன் அல்லது திவ்ய சுபாவத்திற்குப் போகிற நிலைமையிலிருந்தும், சபையார் விழுந்துபோன பாவமான ஜீவன் நிலையிலிருந்து உன்னதமான அழியாமை ஜீவனுக்குச் செல்லும் வாய்ப்பை பிதாவாகிய தேவன் தந்திருக்கிறார் என்றால் அவருடைய அளவற்ற அன்பை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஆக, அன்பானவர்களே, இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ளவே இயேசு இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் என்கிறார்.



> **ஏசாயா 53:10இல்,'கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி**

**NIV பைபிளில் 'It is the will of God to crush him'** என்று வருவதை கவனிக்கவும். அப்பேர்ப்பட்ட ஜீவனுக்கு தகுதியுள்ளவராக தேவன் நமது கர்த்தரையே நொறுக்க சித்தமாயிருக்கும்போது, நாம் எந்தளவுக்கு உண்மையுள்ளவர்களாக கர்த்தரைப் பின்பற்றுபவர்களாய் இருக்கவேண்டும்.

> **1பேதுரு 2:21இல் - 'இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்"**

ஆகவே நெருக்கமான வழி ஒரு சிலுவையின் பாதை என்பதை புரிந்துகொள்கிறோம்.

**லூக்கா 14:27இல்,'தன் சிலுவையை சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்"**

**ரோமர் 12:1இல்,"நம்முடைய சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று.. இதுவே புத்தியுள்ள ஆராதனை".**

ஜீவபலி என்பது நம்முடைய நேரம், பணம், சொத்து, படிப்பு மற்றும் நமக்கு உண்டானவைகளையெல்லாம் தியாகம் செய்து, நமது சரீரத்தையும் உள்ளத்தையும் பரிசுத்தமாயிருக்கச் செய்யவேண்டும். இவை இரண்டுமே இன்று மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் இதுவே புத்தியுள்ள ஆராதனை என்று பார்க்கிறோம். இவ்வழியிலே பாவியும் சன்மார்க்கனும்கூட நடக்கமுடியாது. தங்களையே தியாகம் செய்பவர்களே நடக்கமுடியும். இவ்வழியில் நடப்பவர்கள் வேதத்தில் **வெளி 14:1-4**ல், 1,44,000 பேர் என்று பார்க்கிறோம். இவர்களே இயேசுவைப்போல கடைசிவரை உண்மையுள்ளவர்களாயிருந்து, அழியாமை ஜீவனைப் பெற்றுக்கொள்வர். ஆக, இவ்வழி சுவிசேஷயுக முடிவுவரை திறந்திருக்கும். இந்த யுகம் முடியும்போது, அல்லது மேற்சொன்ன எண்ணிக்கை நிறைவேறும்போது இவ்வழி மூடப்பட்டுவிடும்.

**லூக்கா 13:24,25** வாசித்தறியவும். மேலும் விசாலமான வழியும் இங்குதான் மூடப்பட்டுவிடுகிறது. இப்போது நாம் மூன்றாவது வழியைப்பற்றி ஆராய்வோம்.

## 3. பெரும்பாதையான வழி

**ஏசாயா35:8இல்- 'அங்கே பெரும்பாதையான வழி இருக்கும். அது பரிசுத்தவழி என்னப்படும்".**

இவ்வழி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடைய இராஜ்யத்தில் துவங்கும் வழியாகும். எவ்வாறு பெரியபெரிய தேசிய நெடுஞ்சாலைகளில் எவ்வித தடையுமின்றி வாகனங்கள் செல்கிறதோ அதேபோல இவ்வழியில் ஜனங்கள் செல்லும் வாய்ப்புப் பெறுகிறார்கள். விசாலமான வழியில் மரணத்திற்குள்ளாக சென்ற உலகின் அனைத்து ஜனங்களும் உயிர்த்தெழுந்து வருவர்.

**யோவான் 5:28இல்,'பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தம் கேட்கும் காலம் வரும்"**

**1தீமோத் 2:4ல்,'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவைஅடையவும்.."**

ஆக, இராஜ்யத்தில் அனைவரும் மரணத்திலிருந்து உயிரடைந்து, பாவத்திலிருந்து விடுதலையடைய சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டும். இவ்வாய்ப்பு அனைவருக்கும் தரப்படுகிறது. நெருக்கமான வழியில் நடக்க முடியாதவர்களுக்காக இவ்வழி திறக்கப்படுகிறது. இவ்வழியில் பாவம் மாத்திரம் செய்யாதவர்களாக அல்லது விரும்பாதவர்களாக இருந்தால் போதுமானது. இவர்களுடைய ஆசீர்வாதம் என்னவெனில், பூமியில் பரிபூரண மாம்சநிலையில் (ஆதாமைப்போல)நித்திய ஜீவன் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.

**யோபு 33:25 - அப்பொழுது அவர்கள் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப்பார்க்கிலும் ஆரோக்கியமடையும், தன் வால வயது நாட்களுக்குத் திரும்புவான்"**



**ஏசாயா 35:8இல்,'தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை. அந்த வழியில் நடப்பவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை"**

இது தீட்டுள்ளவர்களுக்கான வழி.. 'தீட்டுள்ளவன்" என்று பாவிகளைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. மனுக்குலம் முழுவதும் பாவத்தின் பிடியில் கைவிடப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள். இங்கு பேதைகள் அல்லது மதிகெட்டவன் என்று யாரைக் குறித்து சொல்லப்படுகிறது என்று பார்க்கும்பொழுது,

**சங்கீதம் 14:1இல்,'தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்"**

ஆம்.இவ்வாறு சொல்லுகிறவர்கள், இவ்வுலகத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான கல்விமான்கள், விஞ்ஞானிகள் ஆவர். இவர்கள் இந்த அண்டசராசரத்திற்கு தனிப்பட்ட சிருஷ்டிகர் என்று யாரும் இல்லை என்றும், எல்லா சிருஷ்டிகளும் பல காலங்களுக்கு முன்பு சில சம்பவங்களினால் உண்டாயினதென்றும் பகிரங்கமாகக் கூறுகிறார்கள்.
ஆம். இதுவே **'பிக் பேங்க் தியரி"(Big Bang Theory)** ஆகும். பெரும்பாதையான வழியில் நடக்கும்பொழுது இவர்கள் திசைகெட்டுப்போவதில்லை. இந்த வழியைப்பற்றி இன்னும் சில காரியங்களைப் பார்க்கலாம்

**ஏசாயா 35:9 - 'அங்கே சிங்கம் இருப்பதில்லை, துஷ்டமிருகம் அங்கே இருப்பதில்லை"**

இங்கு மிருகத்தைப் பற்றி சொல்லப்படுகிறதா? அப்படியானால் இனி அங்கு சிங்கங்கள் இருக்கப்போவதில்லையா, இது நிச்சயமாக சொல்லர்த்தமான சிங்கத்தைக் குறித்துச் சொல்ல வாய்ப்பில்லை. இந்த வசனத்தில் சொல்லப்பட்ட சிங்கம் எது என்று பார்க்கும்பொழுது,

**1பேதுரு 5:8 - 'உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல.."**

ஆம். இங்கு சொல்லப்படும் சிங்கம் சாத்தானைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் அனைவருக்கும் தேவனைப்பற்றியும், இயேசுவைப்பற்றியும் தெளிவாகப் போதிக்கப்படும். அங்கே சிங்கம் இருப்பதில்லை, துஷ்டமிருகம் போவதில்லை எனும்போது, கெர்ச்சிக்கிற சிங்கமாகிய சாத்தானையும், பாவ வழியைத் தூண்டும் எந்தக் காரியமும் அங்கு இருப்பதில்லை. இவ்வாறு 1000 வருட ஆட்சியில் எல்லா ஜனங்களும்(ஆதாம் உட்பட) சத்தியத்தின் அறிவை அடைந்தபின்பு, 1000 வருடம் முடிந்து சாத்தான் கடைசியாக ஜனங்களை சோதிக்க அனுமதிக்கப்படும்போது, சிலர் அவன் பின்னால் துணிகரமாக செல்லும்போது **(ஏசாயா 26:10)**, அவர்களோடேகூட சாத்தானும் அவனுடைய தூதர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர்**(வெளி 20:7,8)**.

ஆகவே பிரியமானவர்களே, இக்காலத்தில் நாம் சாத்தானை வெல்லமுடியவில்லையெனில், ஆயிரவருட முடிவிலும் அவனை வெல்லமுடியாது. எனவே இப்போதே அந்த நெருக்கமான வழியில் சென்று மகா உன்னதநிலையை அடைய முயற்சிப்போமாக.

***தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.***

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/